# நான்

ஓர் உளவியல் ஏடு




உறவு

பங் — சித் 1982

மலர்: 8 ● இதழ்: 2

விலை: ரூபா 1/50

## உள்ளே . . .


| | பக் |
|---|---|
| அழியாத கோலங்கள் | 3 |
| இனிமையான . . . | 4 |
| 'நான்' உறவு "நான்" | 8 |
| சிதையாத ஓவியங்கள் | 11 |
| கருத்துக் குவியல் | 16 |
| உறவு ஒரு . . . | 20 |
| உன்னை நீயாக . . . | 26 |
| வாசகர் அறிமுகம் | 29 |
| கேள்வி? பதில்! | 30 |
| கழுதைகள் | 31 |
| வாசகர் பூங்கா | 39 |



**ஆசிரியர்:**
வின்சன்ற் பற்றிக் O.M.I.

**உதவி:**
வீனஸ் சொய்சா
S. S. துரம்
M. S. குரூஸ்

**அமைப்பு:**
ஸ்ரனி அன்ரனி

**ஆலோசகர்கள்:**
விக்ரர் குரூஸ் M.A., Ph.D.
ஒஸ்வல்ட் பேத் S.T.L , Ph.D.

**முகவரி:**
"நான்"
அ. ம. தி. பயிற்சியகம்
அம்பிட்டி.


# சமூகத் தொடர்புகள்

## வைகாசி — ஆனி இதழ்

- கதைகள்
- கவிதைகள்
- கட்டுரைகள்
- கடிதங்கள்

இன்னும் இதர சுயபடைப்புக்களை ''நான்'' முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**வாசகர் கவனத்திற்கு:**
''உறவு ஒரு தொடர்கதை'' கட்டுரையின் பக்கங்கள் 22, 23, 24, 25 ஆகியன தவறுதலாக மாறி பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆகையினால் முறையே 1வது 20, 2வது 21, 3வது 24, 4வது 25, 5வது 22, 6வது 23ம் பக்கங்களாக வாசிக்கவும்.

# அழியாத
# கோலங்கள்

அழியாத கோலங்களாக உறவுகள் உறுதிபெற ஒவ்வொரு தனிமனிதனது சமார்த்திமுயம் அவன் மற்றவர்களோடு சங்கமமாகும் பொழுது ஏற்படும் சமத்துவமும் இன்றியமையாதது. ''காதல் என்பது தேன் கூடு; அதைக் கட்டுவது என்றால் பெரும்பாடு'' என்கின்றான் கவிஞன் ஒருவன். காதல் மட்டுமல்ல, எந்த ஒரு உறவும் சிக்கலானது; சிரமமானது. நாளாந்தம் சிரத்தை எடுத்து, செயற்படுவதன் மூலமும் விட்டுக்கொடுக்கும், விளங்கிக்கொள்ளும் மனப்பான்மையை வளர்ப்பதன் மூலமும் உறவிலே உறுதி பிறக்கும். ஒருவர் ஒருவருடாக இருவரும் பார்க்கும் உளத்திறன், இருவரிடையே நிலவும் ஒருங்கமைந்த உணர்வுத்திறன், கருத்து வேறுபாடுகளின் மத்தியிலும் கட்டிக் காக்கப்படும் ஒருங்கிணைந்த மனப்போக்கு (முரண்பாடுகளைப் பாராட்டாது மற்றவர்களை ஏற்றுக் கொள்ளல்) போன்றன உண்மை உறவின் படிக்கற்களாக அமைகின்றன. மனித உறவுகள் மங்காது துலங்குவதற்கு உளப் பொருத்தமே மிகவும் முக்கியமானது. ''உலகத்தின் கண்களிலே உருவங்கள் மறைந்தாலும் ஒன்றான உள்ளங்கள் ஒருபோதும் மறைவதில்லை'' — இது, 'உறவு ஒரு தொடர்கதை'யில் செல்வி சாந்தலட்சுமியின் கூற்று, ஆம், உள்ளத்தால் உண்மையாக ஒன்றுபட்ட உறவுகள் என்றும் உயிருள்ளவை; அவை அழியாத கோலங்கள்.

—ஆசிரியர்

## இனிமையான வாழ்வு அமைப்போம்

"வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில்?" என்று நம்பிக்கையற்று விரக்தியில் வெந்து போகும் உள்ளங்களைத் தட்டியெழுப்பப் பாடினான் ஒரு கவிஞன். இயற்கை நியதியில் யாவருக்கும் ஒரே மாதிரியாக அமைய வேண்டிய வாழ்க்கை அவரவருடைய இயல்பையும் பார்வையையும் பொறுத்தே நறுமண மலர் தூவிய மலர் படுக்கையாகவோ அன்றேல் அலைகள் நிறைந்த கொந்தளிக்கும் கடலாகவோ காட்சியளிக்கிறது. வாழ்வை நம் மனத்தளவில் ஆயினும் இனிமையாக்க முதலில் நம்பிக்கை என்ற துரும்பு நமக்கிருக்க வேண்டும். பரீட்சையில் சித்திகிடைக்குமா, நல்ல ஒரு தொழில் வருமா, மனம் நிறைந்த வாழ்க்கைத் துணை அமையுமா? என்றெல்லாம் எதிர் காலத்தை கேள்விமயமாக்கி, சந்தேகத்தை வளர்த்து மனதைக் குழப்புவதால் நமக்கென எவ்வித புதிய நன்மையும் கிடைத்துவிடப் போவதில்லை. எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டிய, திட்டமிடவேண்டிய அவசியமும் கடமையும் யாவருக்கும் வேண்டும்தான்! ஆனல் அதேவேளை நம்மை மீறிய ஏதோ ஒரு சக்தி விதி என்ற வடிவில் நம்முடன் விளையாடக் காத்திருப்பதை, அவனவனுக்கு அளக்கப்பட்ட அளவில்தான் கிடைக்கும் என்ற நியதியை உணரவேண்டும். இவை இறை நம்பிக்கையால் மட்டும் ஒப்புக் கொள்கின்ற விடயங்கள் அல்ல. நம் அனுபவ பூர்வமான நிதர்சன உண்மைகள் இல்லையா?

எனவே இயன்றவரை முயற்சிப்போம். முடிவு நம் கையில் இல்லை. யாரை நொந்து என்னுவது? ஒரு குறி தவறினல் இன்னொரு குறியை நோக்கி முன்னேறுவோம் என்ற நினைவு மனதில் பலமாக நிறுத்தப்பட வேண்

டும். வாழ்க்கை என்ற நாடக மேடையில் நமக்கு கொடுத்த பாத்திரத்தை சரியாக செய்து முடிப்பது தானே நம் கடமை. பாத் திரத்தை படைத்தவன் தானே முடிவை நிர்ணயிக் கிறுன். நாம் ஏன் அலட் டிக்கொள்வான்?

துன்பம் என்பது நடந்து முடிந்துவிட்ட நினைவுகளை நினைத்து வருந்துதல்போல பயம் வரப்போவது பற் றிய துயரமாகும். இரண் டும் இருக்கும்வரை நம்மை இனிமை எப்படி எட்டி பார்க்கும்? விருந்தில் தொடர்ந்து இனிப்பை சாப் பிட முடியுமா? காரமும் தேவைதானே! வாழ்வு என்ற விருந்திலும் காரம் தேவை எனலாம். விருந் தில் ஒருவரால் தாங்கக் கூடிய காரத்தினளவு வேறுபடுவதுபோல துன் பத்தை தாங்கக்கூடி மனப் பக்குவமும், வைராக்கியமும் வேறுபடுகிறது. இதன் அளவைப் பொறுத்தே துன் பமும் அணுகுகிறது எனவே எனக்கு அப்படி நடந்து விடுமோ என ஒருவருடன் ஒப்பிட்டு வேதனை படுவது கூட அர்த்தமற்றதே!

வாழ்வில் எதற்காகவும் அலட்டிக்கொள்ளக் கூடாது சனியன் பிடித்த மழை என் பதோ, பாழாய்போன வெய் யில் என்பதோ நிலைமையை மாற்றுவதில்லை. அலட்டிக் கொள்ளும் மனப்பான்மை எம்மிடம் மற்றவர்களை நெருங்கவிடாமல்தான் தடுக் கும். ஆனால் சந்தோசமான மனநிலையை ஏற்படுத்துவ தன் மூலம் புறச்சூழலின் கொடுமையை ஓரளவு குறை த்துக் கொள்ளலாம். நல்ல புத்தகக் கருத்துக்களில் மனதை ஈடுபடுத்துவது, அறிவாளிகளுடன் உரை யாடுவது மனப்பாரத்தைக் குறைப்பதுடன், அறிவை யும் வளர்க்கும். ஆனால் அழு குரல் மனிதர்களோ நம் சக்தியை அழித்து விடு வார்கள்.

கிடைப்பதை விட்டுவிட்டு கிடைக்காததை எண்ணிப் பொருமும் மனநிலை, அவ நம்பிக்கையும் தாழ்வு மனப் பான்மையும், சிறிய விட யங்களைப் பெரிது படுத்தும் சிலரது பொழுதுபோக்கு, சென்றதை எண்ணிக் குமையும் சீரழிவு, எதிலும் குற்றம் கண்டுபிடித்துக் கொண்டு தன் வாழ்வை யும், பிறரது வாழ்வையும்

நாசமாக்கும் சிலரது சிந்தனை ஓட்டம், தன்னைத் தானே எதற்கும் நொந்து கொண்டு, தன்னைத்தானே தாழ்த்திக்கொண்டு வாழும் ஜீவாத்மாக்களின் மனநிலை இவையாவும் நம் வாழ்வுக்கு குழி தோண்டக்கூடியவை.

மாறுபட்ட மனோபாவம் வாழ்வில் ஒளியூட்டும்; மகிழ்ச்சிதரும். வாழ்வில் தொட்டாற் சுருங்கியாக இல்லாமல் ஒரு சகிப்புத் தன்மையை வளர்ப்பது, காரியங்களைக்கண்டு பயந்து அஞ்சுவதற்கு பதில் துணிந்து செய்யத் தொடங்குவது, மனதில் ஓர் சுவர்ஸ்ய மனோபாவத்தை வளர்ப்பது நமது குறைகளைக் கண்டு நாமே நகைப்பது, நல்ல பொழுது போக்குகளில் ஈடுபடுவது யாவும் வாழ்வில் நாம் ஓர் அர்த்தம் காண வழிவகுக்கும். உள்ளத்தை எப்போதும் கவர்ச்சியாக வைத்திருப்பது நமக்குமட்டுமல்ல சுற்றியிருப்பவர்களுக்கும். மகிழ்வைக் கொடுக்கும். உள்ளம் கவர்ச்சியாய் இருக்க நாம் பேசும் சொல் இனிமையாக இருக்க வேண்டும். செயலில் செம்மையும், நடையில் பண்பும், உடையில் எளிமையும், பார்வையில் நேர்மையும், முக பாவத்தில் உண்மையும் இருக்க வேண்டும்.

வாழ்க்கையின் இன்பம் குடிப்பதிலோ, கும்மாளமிடுவதிலோ, பெண்துணை நாடி ஓடுவதிலோ இல்லை இவை முடிவில் துயரம் தேடித்தரும் கண நேர போலி மயக்கங்களே! உண்மையான இன்பம் அன்பான மனைவியின் இதழ் நிறைந்த புன்னகையில், குழந்தை செல்வங்களின் மழலை மொழியில், கடமை தவருத தொழிலில் தான் மிளிர்கிறது. ஒழுங்கான அன்பு வாழ்வு கிடைத்துவிட்டால் அந்த அன்பு ஒன்றுக்காக, நம்மில் அன்பானவர்களில் அன்பு செலுத்துவதற்காகவேனும் நாம் மகிழ்வுடன் வாழவேண்டும் என்ற எண்ணம் உரம் பெறும்; உறவு உறுதிப்படுத்தப்படும்.

எதிலும் பிறருடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. யாரையும்விட நாம் எதிலும் தாழ்ந்தவர்கள் அல்ல. அவர்களிடம் உள்ள ஒரு சிறப்பு எம்மிடம் இல்லையென்ருல் அதே மாதிரி எம்மிடமுள்ள ஒரு

சிறப்பு அவர்களிடம் நிச்சயம் இல்லாமலிருக்கும். தாழ்வுணர்ச்சியை அகற்றுவதிலுள்ள அவசியம் வெறுப்புணர்ச்சியை நெருங்கவிடாது செய்வதிலும் தங்கியுள்ளது. எமக்குப் பிடிக்காததை மற்றவர்கள் செய்யும்போது அதற்காக நாம் அவர்களை வெறுக்காமல் ஏன் இவர்கள் இப்படியிருக்கிறார்கள் என்று அவர்களிலிருக்கும் நிலையிலிருந்து பார்ப்போமானால் அவர்கள் மேல் நமக்கு அனுதாபமே மிஞ்சும். எனவே எப்போதும் எதற்கும் அலட்டிக் கொள்ளாமல், நம்பிக்கையுடன், அன்பாக, மகிழ்வாக அமைதியாக புன்னகையுடன் உடன் இருந்து பிரச்சனைகளை அணுகுவோம், தீர்வுகாணுவோம் வாழ்வை இனியதென்றல் வீசும் நந்தவனம் ஆக்குவோம் என்று நாம் இப்போதே திடசங்கற்பம் எடுத்துக் கொள்வோமே! அ ் புக்கு பணிவது அதற்கு அழகே தவிர அதிக இழிவு இல்லை. உலகையே நம் அன்புக்கு வசப்படுத்துவோமாயின் அத்தனை இன்பமும் நம் காலடியில்தான் க 'த்திருக்கும். முயன்றுபார்ப்போமா?

எஸ். ஸ்ரீரஞ்சனி
விவசாய பீடம், 2-ம் வருடம்,
பேராதனைப் பல்கலைக் கழகம்.

---

''உன்னுடன் நான் உண்மை உறவைத் தொடரும்
போது என்னை உனக்கு வெளிப்படுத்துகின்றேன்
எனவே என்னை நீ காட்டிக்கொடுத்து விடாதே''

— பவுல்

''அயலவனுடன் நீ நட்புறவு கொள்ளும்போது
அவனை ஒரு பொருளாக மதியாது ஒரு ஆளாக
மதிக்கும் போது உனது உறவு உன்னை வெளிப்படுத்தும்''

மாட்டின் Buber

# 'நான்' உறவு "நான்"

அகங்காரத்தின் அவலத்தை இவ்வையத்தில் குறிக்கும் சொல் 'நான்'. இந்த 'நான்' என்ற அகந்தையை தன் நாமமாய்க் கொண்டு இயங்கி வரும் "நான்" என்ற ஏட்டிற்கும், புவியில் மனித ஜீவனாய் பிறந்து இன்று அரைகுறை வளர்ச்சியில் நிற்கும் நான் என்ற எனக்கும் இடையான தொடர்பு அல்லது உறவு தான் என்ன?

இதை ஆராயமுன் உறவு என்பதன் அர்த்தத்தை ஆராய்தல் வேண்டும். தாய்-தந்தை, இறைவன்-மனிதன், சகோதர-சகோதரர்கள், பெற்றோர் - குழந்தை, அயலவர்கள், இனத்தவர்கள், நண்பர்கள் தொழிலாளி – முதலாளி, அரசினன்-குடிமக்கள் என்று விரிவடைந்து செல்லும் சமூக வட்டத்திலே ஒரு முதுகெலும்பாக, உயிர்நாடியாக உலாவிவரும் உணர்வின் வெளிப்பாடே உறவு. இவ்வுறவின் சார்பாக அன்பு, பாசம் என்னும் நேச உணர்வுகளும், இவ்வுணர்வின் எதிர்மறையாக பொறுமை, எரிச்சல் கோபம், பழிவாங்கும் தன்மை போன்ற கோர உணர்வுகளும் தோற்றுவாய் ஆகின்றன. இவ்வாறு தோன்றும் தோற்றுவாய்களுக்கு அடிப்படைக் காரணமாக அமையும் இந்த உறவு ஒரு தனி மனிதன் சார்பாக எவ்வாறு தொடர்புள்ளதோ, அதைப் பொறுத்தே அவனைச்சார்ந்துள்ள சமுதாயத்தில் அது பரிபூரண நிலையை அடைகின்றது. எனவே ஒவ்வொரு 'நான்' களில் உறவின் முழுவடிவ்மே சமுதாய சூழலாக கருதப்படுகின்றது.

இந்த உறவின் வளர்ச்சிப் போக்கில், 'நான்' என்ற தனிமனிதன் எனக்கும் 'நான்' என்ற ஏட்டுக்கும்

இடையான உறவு ஒரு விசித்திரமானது.

மக்களை உளவியல் ரீதியாக உருப்போட்டு பார்க்கின்றான் 'நான்'. ஒவ்வொரு உள்ளத்தின் வளர்ச்சியையும் கருவிலிருந்து வளர்த்து வருகின்றான். "நான்" இறைவனுக்கும் மனிதனுக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும், சமுதாயத்துக்கும் சமுதாயத்துக்கும், இவ்வாறு எல்லா அமைப்புக்களின் உறவுகளுக்கும் ஒரு ஊக்கியாக வளர்கின்றான் "நான்" இவ்வாறு சமூக அமைப்பின் ஒரு முதிர்வினை அடைந்துள்ளான் "நான்". இவ்வாறாக அகராதியில் காட்டிய அகந்தை என்ற நானின் பொருளை மாற்றியமைக்க முயன்று கொண்டிருக்கும் "நான்" உக்கும், சமுதாய மனித 'நான்' களுக்கும் உள்ள உறவு எந்த விதத்தில் அமைகின்றது?

'பஸ்'சில் ஏறுவதற்காக பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்கும் நான், பஸ் ஒன்று சன நெருக்கலுடன் என்னைத் தாண்டிச் செல்கையில் "விசரன் என்னை ஏற்றிப் போனுலென்ன?" என்று எண்ணும் நான், வேருெரு பஸ்சில் சனத்துடன் ஏறிய பின் நிற்க முடியாமல் நின்று செல்கையில் அடுத்த பஸ்தரிப்பு நிலையத்தில் பஸ் நிறுத்தப்படுமாயின் "இன்னும் "ஏன்" சனத்தை ஏற்றுகின்றான்" என எரிந்து கொள்ளுகின்றதும் அதே நான். இவ்வாறு ஒவ்வொரு விடயத்திலும் ஒவ்வொரு இடத்திலும் மேற்கூறிய உதாரணம் போல் அல்லது அதைவிட மோசமாகவோ நடந்து கொள்கின்றவன் நான். நான் என்ற ஒரு தனிமனிதனுகி உறவுகள் என்ற உணர்வினை பிரித்து எடுத்து சுயநலத்தின் முழுவுருவாகவே திகழ்பவனுகின்றான். இது சமுதாயத்திலிருந்தும் என்னையே பிரித்துப் பார்க்கும் ஒரு சுயமைத்தனம். இதன் விளைவுகளாக கோபம், பொருமை, பழிவாங்குதல் என்ற உணர்வுகள் 'நான்' என்ற தனி மனிதனை முழுதாக அடிமைப்படுத்துகின்றது. இந்நிலையில் 'நான்' அகந்தையின் அவலமே!

இந்நிலையில், என்னைப் பார்த்து கைகொட்டிச் சிரிக்கவில்லை "நான்". "நான்" வெட்கமும் வேத

லையும் மிஞ்சும் ஒரு பரிதாப நிலையில் நான் இருப்பதை எடுத்துக் காட்டுகின்றான். இந்த ஒவ்வொரு அகந்தை யுடைய 'நான்'களும் அழிய வேண்டும் என்றும், 'நான்'கள் சமுதாயத்தை வாழ்விக்க வேண்டும் என்ற நோக்குடனும் 'நான்'களைப் புடம் போட முயற்சிக்கின் றான் "நான்". இந்தவிதத் தில், ஒரு பெற்றோர் - பிள் ளைகள், குரு - சிடன், நல்ல நண்பன் என்ற உறவுக் கோட்டின் எல்லையில் நிற் கின்றான். "நான்".

ஆம் இதுதான் "நான்", 'நான்' உடன் கொண்டுள்ள உறவின் முதிர்நிலை. உற வுக்குப் பொருட்தேடும் "நான்", 'நான்'களின் உற்ற நண்பனுகி உறவாடி நிற்கின்றான். 'நான்'கள் வாழ "நான்" வளர்க!

— செல்வி. H. மாலினி
(விவசாய பீடம், (2ம்வருடம்) பேராதனை பல்கலைக்கழகம்.

## உறவுகள் பிரிவதில்லை

உறவு, நட்பு நிலைப்பதற்கு தியாகம், அன்பு, ஒருவரை ஒரு வர் புரிந்து அவரவர் குறைவு நிறைவுகளுடன் அவரை அவராக ஏற்றுக்கொள்ளும் மனநிலை (இதற்கு நிரந்தர மனம் - Open mind) போன்ற பண்புகள் இருக்கும் வரை உறவுகள் பிரிவதில்லை இப் பண்புகள் மாறி தன்னலம், பெருமை, பொறுமை (இதற்கு குறுகிய மனம் narrow mind) நம்பிக்கையின்மை, சந்தேகம் போன்றன தலைதூக் குமிடத்து பிரிவேயன்றி உறவில்லை,

"கடும் சினேகம் கண்ணைக் கெடுக்கும்" என்பார்கள். ஆம், நட்பு மிகுதியால் ஒருவர் ஒருவரின் குறைவு நிறைவு பல வீனங்களின் எல்லையை மீறி அவர்களின் இரகசியத்தினுள் (Privacy) நுழைந்து அவரை அவராக ஏற்றுக்கொள்ள மறந்துவிடும்போது உறவுகள் முறிகின்றன.

பிரிந்தவர் கூடினால் உறவும் வேண்டுமோ? ஆம் பிரிந்தவர் கள் தங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து தங்கள் குறைகளை உணர்ந்து திறந்த மனநிலையுடன் மீண்டும் நட்பு கொள் கின்றனர். இதனால் அவர்கள் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து எதற்கும் ஓர் எல்லை உண்டு என்பதை உணர்ந்து குறைகளைத் திருத்தி நிறைவுடன் வாழ ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்கின்றனர்.

— எம். எஸ். குறாஸ்.

# சிதையாத ஒவியங்கள்

சிறுகதை

— விஜி ஜோர்ச்
அல்வாய்

ஓரளவு பெரிய வீடு. வீட்டின் வெளிப்புறத்தே அழகிய தோட்டம். பலர் வசிப்பதற்கேற்ற இடமாகக் காணப்பட்ட போதும் அங்கே அமைதியே நிலைத்திருந்தது. உள்ளே பிரபு அன்றைய பத்திரிகையை வாசித்தபடி கதிரையில் அமர்ந்திருந்தான். அப்போது ஏதோ வாகனம் வந்துநின்ற சத்தம் கேட்டு பிரபு வெளியே சென்றான். அங்கே அவனது அலுவலக நண்பன் ராஜேஸ் நின்றுகொண்டிருந்தான். ''வா ராஜேஸ், என்ன இன்று இந்தப்பக்கம்'' என்று அழைத்த பிரபுவை தடுத்த ராஜேஸ், ''கோபிக்காதேடா, நான் இப்போ அவசரமாகப் போகிறேன் அதுதான் உனக்கும் சொல்லிவிட்டு . . . . . ''என்ன, என்ன அவசரம்'' ராஜேஸ் கூறிமுடிப்பதற்கு முன் பிரபு முந்தினான் ''ஒன்றுமில்லையடா. என் மனைவியைப் பிரிந்து என்னால் இருக்க முடியவில்லை. அவளாலும் என்னைப் பிரிந்து இருக்க முடியவில்லை. அதுதான்'' ''ஓ . . . அப்படியா சரி சரி, நீ போ'' என்று புன்முறுவலுடன் அனுப்பி வைத்தான். பிரபு எண்ணினான்: ராஜேஸால் அவனது மனைவியைப் பிரிந்து ஐந்து கிழமைகள் இருக்க முடியவில்லை. ஆனால், நான் என் சிந்துஜாவைப் பிரிந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. அவள் இப்போ எங்கே . . . ? எப்படி . . . ?

பிரபு அனாதையல்ல. தாய், தந்தையை அவன் இழந்துவிட்டாலும் அவனுக்கு ஒரு மனைவியை இறைவன் கொடுத்தான். அவளுடன் ஒரு வருடம் கூட வாழ கொடுத்து வைக்கவில்லை. அதற்குக் காரணம்: சுதந்திரத்தை விரும்பி சுற்றித்

திரியும் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவள் சிந்துஜா அமைதியையும் எளிமையையும் விரும்பும் சாதாரண குடும்பத்தில் பிறந்தவன் பிரபு. இருவரும் ஒரே அலுவலகத்தில் வேலை செய்தார்கள். ஒருவரை ஒருவர் மனத்தால் நேசித்தார்கள். அது திருமணம் வரை சிறப்பாகவே இருந்தது. ஆனால் சிந்துஜாவால் பிரபுவின் கட்டுப்பாட்டுக்கு அடங்க முடியவில்லை. அவன் எத்தனை தடவை சொல்லியும் கேளாதவளாய் இருந்தாள். காலை ஆறு மணிக்கு வீட்டில் இருந்து கிளம்பினால் மாலை ஆறு மணிக்கே வீட்டுக்கு வருவாள். அப் பிரச்சனை பெரிய பிரச்சனையாக விவாகரத்து என்னும் அசுரனிடம் இருவரையுமே ஒப்படைத்து விட்டது ஆனால் இன்றும் இருவருமே ஒருவரை ஒருவர் தம் மனதில் நினைத்து பூஜித்தனர். இந்த ஐந்து வருடங்களாக பிரபு ஒழுங்காக உண்பது கூட இல்லை.

அங்கே சிந்துஜா . . . பிரபுவின் நிலையிலேயே இருந்தாள். இந்த ஐந்து வருடங்களாக அவள் பிறந்த வீடு போய்விடவில்லை. தன் உறவினரிடம் போய் விடவில்லை. ஓர் விடுதியில் பிரபுவை நினைத்தபடியே இருந்தாள். தான் நடந்து கொண்டதை நினைத்து மனம் புழுங்கினாள். பிரபுவைக் கண்டு அவனிடம் மன்னிப்புக்கேட்டு அவனுடனேயே வாழ வேண்டும் என விரும்பினாள். ஆயினும் . . . . .

பல வருடங்கள் கழிந்தன. பிரபு நோயாளியானான். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான். அவனைப் பரிசோதனை செய்தார் வைத்தியர் ரமேஸ். பரிசோதனை முடிந்த பின்னர், ''நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்? உங்கள் உறவினர்கள் யாராவது . ." என்று கேட்ட டாக்டரை தடுத்து "எனக்குப் பெற்றோர் இல்லை; உறவினர்கள் இல்லை; என் மனைவி . . . . என்னோடு இல்லை'' சோகத்துடனும்' அனுதை உணர்வுடனும் கூறிய அவனையே பார்த்தபடி இருந்தார் டாக்டர் ரமேஸ் அந் நேரத்தில் இருந்தே ஓர் உற்ற நண்பனைப் போல், சகோதரனைப்போல் பழகினார் டாக்டர் ரமேஸ். அதற்கு

என்ன காரணம் என பிரபுவால் உணர முடியவில்லை. சில நாட்களின் பின்னர்: ''பிரபு உன்னிடம் நான் உன்னைப் பற்றி சொல்லாததற்கு மன்னித்துவிடு நீ...'' அவரது வார்த்தைகள் தடுமாறின. ''சொல்லுங்கள் டாக்டர்'' பிரபு ஆர்வத்துடன் கேட்டான். ''நீ.... இன்னும் மூன்று .... நாட்கள்தான் ..... உயிரோடு இருப்பாய்'' கூறிவிட்டு பதிலுக்கு காத்திராது டாக்டர் போய்விட்விட்டார். இப்போதுதான் பிரபுவிற்கு டாக்டர் ரமேஸ் தன் அளவுக்கு அதிகமாக அன்பு வைத்ததற்குக் காரணம் விளங்கியது. அதை நினைத்த பிரபு கவலைப்படவோ, பயப்படவோ இல்லை. ஆனல், சிந்துஜாவைப் பார்க்கவேண்டும் போல் இருந்தது.

''மூன்று நாளில் நான் இறந்து விடுவேன். அதன் முன் ஒருதடவையாவது சிந்துஜாவைப் பார்க்க வேண்டும். இம் மூன்று நாளும் நான் சிந்துஜாவையே தேட வேண்டும்'' என எண்ணினன். அதை டாக்டர் ரமேஸிடம் கூறினன். அவனுக்கு ஓய்வு வேண்டும் என்று எண்ணிய ரமேஸ், அவனது அன்பு உள்ளத்தை புரிந்துகொண்டு அவனை ஒரு சகோதரனுக நினைத்து, பிரபுவின் கடைசி ஆசையை தானே நிறைவேற்ற முன்வந்தார். ''பிரபு உன்னை என்னுல் இந்த உலகில் வாழவைக்க முடியவில்லை. உன் மனைவியை யாவது உன்னிடம் ஒப்படைக்கிறேன். எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கிறேன்''. என்று அன்பு மொழிகள் கூறினர். ''டாக்டர்.... அவனுல் தன் காதுகளை நம்ப முடியவில்லை. ''ஆம் பிரபு'' என்று கூறி வெளியேறினர். ''இப்படியும் ஒரு டாக்டரா? . . . கடவுளே'' பிரபு எண்ணினன்.

**முதல் நாள்** பிரபுவின் உதவியுடனும், வேறு சிலரின் உதவியுடனும் அவளது பெற்றோர் வீடு முதல், மற்றும் உறவினர்கள், நண்பர்கள் வீடு வரை சிந்துஜாவைத் தேடினர் ரமேஸ். காலை முதல் மாலை வரை எங்கு தேடியும் அவருக்கு தோல்வியே கிடைத்தது. **இரண்டாம் நாள்:** அந் நகரிலுள்ள விடுதிகள் எல்லாம் தொலைபேசி மூலம் ரமேஸ் தொடர்பு கொண்டார்.

மாலை ஆறுமணி இருக்கும் தொலைபேசி மூலம் சிந்துஜா இருக்கும் இடத்தை தெரிந்து கொண்டு, அவளுடன் தொலைபேசி மூலமாகவே பிரபுவைப்பற்றி கூறினுர். அதைக்கேட்ட சிந்துஜா அதிர்ச்சியுற்று "இதோ புறப்பட்டு வருகிறேன்" என்று கூறி தொலைபேசியை பாதியில் வைத்துவிட்டுப் புறப்பட ஆரம்பித்தாள். அவளுடன் பேசிய அந்த சில நிமிடங்களிலிருந்தே "இவர்களா விவாகரத்து செய்தவர்கள்"? என்று அதிசயித்தார். சிந்துஜா 300 மைல்களுக்கப்பால் இருப்பதினல் பிரபுஇருக்கும் இடத்திற்கு புகைவண்டியில்தான் வரவேண்டும். இந்த நல்ல செய்தியை ஓடிச்சென்று பிரபுவிடம் கூறினுர் டாக்டர் ரமேஸ். பிரபு மிக மகிழ்ச்சியுடன் அவள் வருகையை ஆவலோடு எதிர்பார்த்திருந்தான்.

**மூன்ரும் நாள்:** பிரபு இவ்வுலகை விட்டுச் செல்ல 15 நிமிடங்கள்இருந்தன. புகைவண்டி வந்து சேருவதற்கு இன்னும் 10 நிமிடங்கள் இருந்தன. உயிரோடிருக்கும் அந்த ஒவ்வொரு நிமிடத்திலும் சிந்துஜாவைப் பற்றியே ரமேஸிற்கு சொல்லியபடி இருந்தான். நேரம் நெருங்கியது. இன்னும் புகைவண்டி வந்து சேரவில்லை "நான் என் சிந்துஜாவை இப்பொழுது காணத்தானே போகின்றேன்" என்று கூறிச் சிரித்தான். அதுவே அவனது இவ்வுலக வாழ்வின் கடைசி வார்த்தையாகக், கடைசிச் சிரிப்பாக இருந்தது. அப்போது ரமேஸ் நேரத்தைப் பார்த்தான். சரியாகப் பத்து மணி. அவன் உடன் பிறந்தான் போன்று ரமேஸ் உள்ளத்தால் வெதும்பினுன்,

"இன்று பார்த்து புகைவண்டி பிந்திவிட்டதே" என ரமேஸ் எண்ணினுர். உயிரோடு உடலைப் பார்க்க வரும் சிந்துஜாவிற்கு பிரபுவின் உடலையாவது காட்ட எண்ணி ரமேஸ் அவனது உடலை வைத்தியசாலையிலேயே பாதுகப்பிற்காக வைத்துவிட்டு புகையிரத நிலையம் நோக்கி சென்ருர். அப்போதுகூட அங்கே புகைவண்டி வரவில்லை அப்போதுதான், "இங்கிருந்து ஆறுமைல் தொலைவில் புகைவண்டி விபத்துக்குள்ளாகியது" என்ற செய்தி காதில் விழுந்தது. உடனே

ரமேஸ் விபத்து நடந்த இடத்திற்குச் சென்ருர். அங்கே பலரின் பிரேதங்களும் பற்பல பொருட்களும் சிதறுண்டு கிடந்தன. விசாரணையின் பின்பே சிந்துஜாவும் இவ்விபத்தில் மாண்டு விட்டாள் என ரமேஸ் முடிவு செய்தார். இப்புகை வண்டி எப்போ விபத்துக்குள்ளாகியது?'' என்று அங்கு நின்ற ஒருவரைப் பார்த்து கேட்டார். சரியாகப் பத்து மணிக்கு என பதில் கிடைத்தது. "பத்து மணிக்கா .. இருவருமே பத்து மணிக்கா . . . . ." ரமேஸ் எண்ணிஞர்.

பிரபு கூறிய இறுதி வார்த்தை அவர் நினைவுக்கு வந்தது. ''நான் என் சிந்துஜாவை இப்பொழுது காணத்தானே போகிறேன்' ஆம் அவர்கள் இருவருமே பத்து மணிக்கே ஒருவரை ஒருவர் சந்தித்து விட்டார்கள். நான்தான் தப்புக் கணக்குப் போட்டுவிட்டேன்! அவர்கள் என்றுமே சிதையாத ஓவியங்கள்.

(யாவும் கற்பனையே)

---

# கருத்துக் குவியல் 20

## தொலைக்காட்சி

### சமுதாயத்திற்கு

### சாதகமானவையா? பாதகமானவையா??

உங்கள் கருத்துக்களை சார்பாகவோ அன்றேல் எதிராகவோ எழுதி, சித்திரை 28க்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.



# கருத்துக் குவியல் 19

## சீதனப் பிரச்சனைக்கு தீர்வு காதல் திருமணமே!

**★ அவமானம்**

திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகிறது. என்று கூறிச் சென்றனர் அன்றைய வேதாந்திகள். அதை மறுத்து திருமணம் பூமியிற்றான் நிச்சயிக்கப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டத் தொடங்கிவிட்டது இன்றைய இளஞ் சமுதாயம். இது வரவேற்கத்தக்கதொரு நல்ல காரியமே. எதிலும் முன்னேற்றம் காணத் துடிக்கும் இளமை நெஞ்சங்கள் வாழ்வின் முக்கிய அம்சத்தை வகுக்கும் திருமணத்தில் முன்னேற்றம் இல்லாது இருப்பார்களா?

ஆடு மாடுகளை விலைபேசி விற்பதுபோல் ஆண் மக்களை பெற்ற பெற்றோர் திருமணச் சந்தையில் போட்டு ஐம்பதாயிரம், ஒரு லட்சம் என ஏலங்கூறுகின்றனர். பணம் உள்ளவர்கள் அவர்களை விலைக்கு வாங்கி தங்கள் பெண்பிள்ளைகளுக்கு உரிமையாக்கி விடுகிறார்கள். இது ஆண்மக்களுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தி விடுகிறது. என்றாலும் என் செய்வது வழக்கமாயிற்றே இந்நிலை மாறவேண்டுமென்றால் இன்றைய இளைஞரில் சிலர் செய்வதுபோல் எல்லா இளைஞரும் செய்யவேண்டும்.

அதாவது, பருவம் ஆரம்பிக்கும் முன்னரே காதலில் ஈடுபடுவதை நிறுத்தி தம்மால் இயன்றளவு கல்வியிலேயோ தொழிலிலேயோ ஊக்கம் செலுத்தி பணத்தைச் சம்பா

த்துக் கொள்ளப் பார்க்க வேண்டும். தம் குடும்பத்திற் கேற்ற பணத்தை உழைத்து கொடுத்துவிட்டால் தான் நினைத்த பெண்ணைச் சீதனம் கேட்காது தன் விருப்பம் போல் அடைந்துவிடலாம்.

உழைப்பில் ஊக்கம் செலுத்தாது காதலில் ஊக்கம் செலுத்தினால் காதல் திருமணங்கள் தடைப்பட்டுவிடும் என்பதை நன்றாக உணர்ந்து வாலிபர் செயல்படவேண்டும். காதல் திருமணம் ஆண்மக்களை பெருமைப்படுத்துவதோடு இல்லற வாழ்விலும் இனிமையை கொடுத்துவிடும்.

— செல்வி. தே. இராக்கினிதேவி
உடுவில்.

★ **தியாகம்**
**சீதனப் பிரச்சனைக்குத் தீர்வு காதல் திருமணமே:**

இன்றைய உலக அரங்கில் அநேகமான கன்னிப் பெண் கள் வாழ்வில் விரக்தியுற்று காலமெனும் கடலிலே இக் கரையோ அல்லது அக்கரையோ என்று கண்ணீர் சிந்தி அனுதினமும் அல்லற்பட்டு அவதியுறுவதை நாம் கண்கூடா கக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு முக்கிய கார ணம் சீதனமெனும் சீர்கெட்ட கொடி நாகம் படமெடுத் தாடுவதும் தனது ஆலகாலவிடத்தை வெட்டி விடுவதனால் அதற்கு நிகர் நிற்க முடியாமல் கதிகலங்குகின்றனர் கன்னி யர் ''தியாகம் செய்பவன் புதுமையைச் சமைக்கிறான்'' என்று அறிஞர் கூறுகிறார். நான் தியாகம் செய்தால் என் தங்கையை யார் ஏற்பது என்ற ஒரு கேள்வி ஒவ்வோர் இளைஞர் உள்ளத்திலும் உதிக்கலாம். ஆனால் பிற் பயிரை தண்ணீர் ஊற்றி வளர்த்தால் தன் பயிர் தானே வளரும்'' என்ற அறிஞர் வாக்குக்கு இடமளிக்கத்தான் வேண்டும். ''உயர்ந்த இலட்சியத்திற்காக உழைப்பதனால் தான் ஒருவன் உயிர் வாழ்வதில் பெருமை முழுவதும் அடங்கி இருக்கிறது'' என்று அறிஞர் பெனட் ஷா கூறுகிறார். எனவே காதல் திருமணம் ஒருவனது இலட்சியமாக அமைய வேண்டும் இதனால் சீதனமெனும் கொடிய அரக்கனைவிட கரிய நாகம் போல படமெடுத்தாடும் சாதி வெறிக்கு சாவுமணியடிக்க

லாம். எனவே உண்மை அன்பில் திளைக்கும் காதல் திருமணம்தான் சீதனப் பிரச்சனைக்குத் தீர்வு காணும்

— அ. ஞானப்பிரகாசம்
மல்வம்.

★ **காதல் தெய்வீகமானது:**

காதலித்து திருமணம் செய்வதால் இன்றைய நவீன உலகில் சீதனைப் பிரச்சினை ஓரளவு குறைந்துகொண்டு வருகிறது. உடல் ஒத்து காதலிக்கும் பொழுது அங்கு சீதனம் என்ற பேய்க்கு சிறிதும் இடமில்லை. காதல் என்பது தெய்வீகமானது. அது சீதனத்தால் தடைப்படுவது அல்ல. அதைத் தடுப்பது சீதனமானல் அதை விரட்டி அடிக்கவும் தயங்கமாட்டார்கள் உண்மைக் காதலர்கள்.

ஆகவே காதல் திருமணம் செய்வதனல் சீதனம் என்னும் நெருப்பை சிறிதும் புகையவிடாது அணைத்துவிடலாம் ஏனென்றால் காதலிக்கும் பொழுது காதலன் காதலியிடம் என்ன சீதனம் கொண்டுவருவாய் என்று கேட்பது இல்லை. மாருக, "என்னைப் பிடித்ததா?" என்றுதான் கேட்பதுண்டு மனமொத்து காதலிக்கும் காதலர்கள் திருமணம் நிறைவேறும்வரை, ஒருவருக்காக ஒருவர் காத்திருந்து திருமணம் செய்வார்கள். இப்படி செய்பவர்கள் ஒருபொழுதும் சீ . . . தனத்தை எதிர்பார்க்க மாட்டார்கள்.

எனவே, இன்றைய இளம் காதலர்கள் உண்மைக் காதலர்களாக வாழ்ந்து சீ . . . தனத்தை ஒழித்து இன்றைய ஏழை மக்களின் வாழ்க்கையை சீர்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஏனென்றால், இச் சீதனப் பேயால் அடிபடுபவர்கள் பெரும்பான்மை ஏழை இளம் பெண்களே. ஆகவே சீ . . . தனத்தை ஒழித்து தங்கள் உண்மைக் காதலை ஊரறிய, உலகறிய சீ . . . . தன ஒழிப்புத் திருமணமாக நடத்த இன்றைய இளைஞர்களை அழைக்கின்றேன்.

— பிறேமா இரத்தின சுந்தரம்
யாழ்ப்பாணம்.

● **விரக்தியும் விபரீதங்களும்:**

சீதனப் பிரச்சினைக்குத் தீர்வு காதல் திருமணமே என எடுத்த எடுப்பிலேயே சொல்லிவிடலாம். ஆனால், வாழ்க்கையில் அதன்பின் ஏற்படும் நன்மை, தின்மை என்பன பற்றி எல்லாம் சிந்திக்காது இளமையின் வேகத்தில், சீதனப் பிரச்சினைக்குத் தீர்வு காதல் என்றும் சாதியால் ஏற்படும் ஏற்றத் தாழ்வுக்குத் தீர்வு காதல் சிலர் அலம்புவதுண்டு. ஆனால் நாள் செல்ல செல்ல இவர்களது நிலைமை அந்தோ பரிதாபமாகிவிடும். இன்றைய இளைய தலைமுறையினர் பேரூந்து, படமாளிகை, வீதிகளில் சந்தித்து காதல் கொள்வதும் பின்னர் அல்லல்படுவதும் இன்று சர்வசாதாரணம். இன்றைய காதல்கள் எல்லாம் காமம், கவர்ச்சி என்பவற்றை மையமாகக் கொண்டுதான் ஆரம்பிக்கின்றன என்பதே உண்மை. இறுதியில் பெண்கள் சீதனப் பிரச்சினையைவிட வேறு விபரீதமான துன்பங்களுக்குள்ளாக நேரிடுகின்றது.

இன்று சமூகத்தில் சமய ரீதியான, பண்பாட்டு ரீதியான பல கட்டுப்பாடுகள் உள. இவற்றையெல்லாம் மீறி ஓடும் ஜோடிகளை அச் சமூகம் புறக்கணிக்கின்றது இதனால் இவர்களுக்கு வாழ்க்கையில் விரக்தியுற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஏன், பெற்றோரின் உத்தரவோடு நடைபெற்ற காதல் திருமணங்கள்கூட சிதைவுற்ற நிலையில் காணப்படுகின்றன என்பது கண்கூடு.

ஆகவே, சீதனப் பிரச்சினைக்குத் தீர்வு காதல் திருமணமே என்பதை முழுதாக ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படியாயின் சீதனப் பிரச்சினைக்குத் தீர்வு? இன்றைய ஆண்கள் சீதனம் என்ற போர்வையில் பெண்களை விலை கொடுத்து வாங்குகின்றார்கள் என்பதை உணர்ந்து அதற்கு எதிர்மாறாகச் செயற்படுவதே இதன் தீர்வாகும்.

— எஸ். என். வி. சிவாஜினி
தமிழ் மகாவித்தியாலயம், தலவாக்கொல்லை.

# உறவு ஒரு தொடர்கதை

உள்ளங்களிடையே
ஏற்படும்
நெருக்கமே
உறவு!

அதன்
பெருக்கமே
அகமகிழ்ச்சி!!

## பரிசு பெறும் கட்டுரை

உறவுகள் தொடர் கதை, உணர்வுகள் சிறு கதை, ஒருகதை இன்று முடியலாம்; முடிவிலும் ஒன்று தொடரலாம்...... இது ஒரு கவிஞனின் பாடலுரு. ஆதிமனிதன் படிப்படியாக வளர்ச்சி அடைந்து எப்போது சமூகமாகத் தொடங்கினுனே அப்போதிலிருந்தே சில பழக்க வழக்கங்களும் சம்பிரதாயங்களும் உருவாகத்தொடங்கின. உறவு பிறந்த இருவரை சகோதரம் என்கிறோம். சக+உதிரம் இவர்களின் இணைப்பே சமூகம். சமூகத்தில் ஒழுக்கங்கள்—> மரபுக்களாகி மரபுக்கள்—> சம்பிரதாயங்கள்—> சட்டங்கள் என்று வருகின்றன. இவைகளே கௌரவ வேலிகளாக நின்று குடும்பங்களையும் காக்கின்றன. ''இவை மட்டும் தான் உறவல்ல; இடையில் வரும் பிணைப்பு உறவும் இன்றி பட்டினி போடும் கணவன், உடன் பிறந்தவர்களையே வழக்கு நீதிமன்றங்கட்கு அழைக்கும் சகோதரர்கள், போன்றவர்களை நாம் கண்டும் கேட்டும் இருக்கின்றோம். இப்படிப்பட்டவர்களின் வாழ்க்கையில் அகோரமான சம்பவங்கள் பல ஏற்படுகின்றன. மனவிரக்தியினுல் உயிர் இருந்தும் பிணமாகவோ அன்றேல் வாழ்க்கையைக் கேவலமாக

கள் பிறப்புக்களால் வரும் உறவுகள் எனவும், ஊர்ப் பொதுநலன்களால் வரும் உறவுகள் (பிணைக்கப்பட்ட உறவு) என இரண்டு வகைப் படுத்தலாம். பிணைக்கப் பட்ட உறவுகளில் தான் சிநேகிதர்கள், ஆசிரிய மாணவர்கள், ஊர்ப்பொது மக்கள் இப்படியாகப் பல உறவுகள் வந்து சேர்கின் றன.

பிறப்புக்களால் வரும் உறவுகளை ஆராயுமிடத்து இவை தாய்—தந்தை—பிள்ளை, உறவினர்கள் எனத் தொடர்ந்து கொண்டு போகின்றன. தந்தையுடன் பிறந்த சகோதரி சம்பந்தியாகின்ருள். இதில் மாமி, மைத்துணி உறவு வளர்கின் றது பாசங்கள், சிநேகிதங்கள் எல்லாமே பிரகாசிக் கின்றன. ஒரே வயிற்றுப் பிறப்புகளே உன்னதமானவை'' எனக்கவிஞர் கண்ணதாசன் கூறுகின்ருர். இடையில் தோன்றும் உறவுகளால் பிணைக்கப் படாதவர்களே இல்லையெனலாம். எல்லா உறவுகளையும் முறித்தோ அல்லது ஒதுங்கியோ வாழ ஒருவனால் முடியாது. அப்படி வாழ்ந்தாலும் அவன் பூரண வளர்ச்சி அடையாதவனுகவே காணப்படுவான்.

தொடர்கதைபோல பிறப்பால் வரும் உறவுகள் பெரும்பாலான இடங்களில் பேதலித்து விடுகின்றன. 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' 'தாயிற் சிறந்த தொரு கோயிலும் இல்லை' என்ற மொழிகள் பல இடங்களில் மறைந்து போயின. தாய் தந்தையரைப் பிச்சைக்கு அலைய விடும் மக்கள், கட்டிய மனைவியை ஒரு கெதி எண்ணி பலர் தாமாகவே வாழ்வை முடித்துக்கொண்டு போகின்றனர். வாழ்க்கையின் இனிமையான பகுதிகளை மட்டும் சுவைப்பவர்கள்; ஆகா இதுவே சொர்க்கம் என்பார்கள். சாதல் இவர்களுக்குப் பிடிக்காதது எதுவும் செய்ய முடிவதில்லை. துன்பத்தை நித்தம் நித்தம் சந்தித்தவர்கள் 'வாழ்வே மாயம்' என்று ஞானிகளாவும் மாறுவர். வாழ்க்கை நாடகத்தின் ஒரு சிறிய அல்லது பாரதூரமான சம்பவம் ஒரு திருப்பு முனையாக மனிதனை மாற்றி விடுகின்றது. ஏனையோருக்கு இது அதிசயமாகவும் கிண்டல், கேலியாகவும் கூட இருக்கலாம். எல்லாவற்றையும் அறிவுடன் வெற்றி கொண்ட பலசாலிகளுக்கு வாழ்க்கை பசும் சோலையாக மாறுகின்றது. ஆனுல் எல்லோராலும் இது

புச் செய்வதற்கு ஒருவரோடு ஒருவர் கலந்து பேசிப்பழகுதல் வேண்டியதில்லை; இருவரிடமுள்ள ஒத்த உணர்ச்சிகளே, நட்பு எனும் உரிமையைத் தந்து விடும். உறவுக்கு அதுவே அருமையான செயலும் சிறந்த பாதுகாப்பாகும். "சொர்க்கத்திலே நான் என் மனைவியைக் காணுவிட்டால் அது எனக்குச் சொர்க்கமாகவே இருக்காது" என்கிறார் ஓர் அறிஞர். உறவின் மகத்துவம் இப்படிப்பேச வைக்கிறது. எமக்கு வரும் கேடுதான் சினேகிதரையும் உறவின் முறையினரையும் அளக்கும் அளவுகோல். சோகமே உருவெடுத்துத் தன்னையே அர்ப்பணித்து பிறவுயிர் காத்திடுவான் உத்தம தோழன்.

காக்கை உணவைக் கண்டதும் மறைக்காமல் தன் இனத்தைக் கூவி உடனிருந்தே உண்ணும் அத்தகைய இயல்பினருக்கே சுற்றப் பெருக்கம் உண்டாகும். பரந்திருக்கும் பாகுபாடற்ற உண்மையன்பு பேதம் கடந்து செல்லும் போது உண்மை நிலையை உணர்த்தும். பொது நலன்களுக்கான உறவுகளிலும் நாம் திண்ணிய அன்புள்ளவர்களைக் காண்கிறோம். இறைவன் தன் வாழ்வில் பங்கு கொள்வதற்காக மனிதனைப் படைத்தார். தந்தை யோண் பொஸ்கோவின் சாதனைகள் பலருக்கு புரியாததாகவே இருந்தது. மனச் சுமையோடு அங்கு செல்லும் இளைஞர்கள் மலர்ந்த முகத்துடன் திரும்புவர். "இளைஞர்கள் நம்மை விரும்ப வேண்டுமானால் நாமும் அவர்களின் கூடவே ஒருவராக நின்று கொள்ள வேண்டும்" எனத் தமது வெற்றியின் இரகசியத்தைக் கூறினார். இவரின் உறவு எல்லோருக்குமே பிடித்தது. முக்கியமாக இளைஞர்களுக்குப் பிடித்தது. இளைஞரில் நல்லவர், கெட்டவர் எல்லோரையுமே தட்டிக் கொடுத்து அன்புடன் விசாரித்தார். பரிசுகள் பல கொடுத்தார். அவர்களுடன் தானும் விளையாடினார். அங்கே குதூகலமும், அன்புறவும் பிறந்தது. "குழந்தையோடு பேச வேண்டுமானால் அதன் மட்டத்திற்கு குனிவதேயன்றி வேறு வழியில்லை" இதுதான்

தந்தையின் அன்பு வழி! எவ்வளவு அழகான ஆழமான தத்துவம்.

தியாக மனமுள்ளவர்கள் இளைஞர்களுடன் இருந்து நன்கு பழகிப் புரிந்துகொண்டு அவர்களின் விருப்பு, வெறுப்பு செயல்களில் அக்கறை காட்டி, அவர்களுள்ளத்தில் தாழ்வு மனப்பான்மையும், வீண் பயமும், ஏற்படா வண்ணம் அன்பு செலுத்தி, குடும்ப சூழ்நிலையை உருவாக்கி; அவர்களது முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து தம் சுயமதிப்பைக் கவனியாது தாழ்ந்து சென்று படிப்படியாக அவர்களை நல்வழிப்படுத்தி உறவை வளர்க்க வேண்டும். இளைஞர்களை இணக்கமாக நடாத்துவதால் மனவேறு பாடுகளும் பயஉணர்ச்சி, நடிபுத்தன்மை, போன்றவைகளும் நீங்கி ஆசிரியர், பெரியோர் மாணவர்கள் பணிந்து ஒழுங்காக வளரவேண்டிய விடயங்களில் வளர்வர். அத்துடன் பெரியோர்க்கும் இளைஞருக்கும் இடையே ஏற்படும் உறவானது என்றும் நிலைக்க வழி வகுக்குகின்றது. உலகத்தின் கண்களிலே உருவங்கள் மறைந்தாலும் ஒன்ருன உள்ளங்கள் ஒருபோதும் மறைவதில்லை. எது எப்படியிருந்த போதும் அகிலமனைத்திலும் உள்ள உயிர்களுக்கு இறைவனின் உறவு தொடர்ந்து இருக்கின்றது. படைத்தவனும் அவனே! படியளப்பவனும் அவனே!

துவக்கத்திலே முடிவுண்டு; முடிவிலே துவக்கமுண்டு; என்றென்றும் மனிதனோடு இறைவனின் இயக்கமுண்டு.

செல்வி. சி சாந்தலட்சுமி
இளவாலை

---

ஆசிரியர் என்போர் ஞான விளக்குகள். எவர் பணம் கொடுத்துக் கேட்டாலும் தம் அறிவை விற்பவர்கள் ஞான விளக்குகள் அல்லர்; அவர்கள் அறிவுப் பரத்தையர் ஆவர்.

—சோக்கிரட்டீஸ்

முடிவதில்லை. உண்மையன்பு கொண்ட உறவினர்கள் மெய்வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார். வேண்டிய உதவிகளைச் செய்து அதில் திருப்தி காண முயல்வர். அன்பின் நீங்காத சுற்றத்தார் அமைந்தனரானால் அது குறைவில்லாமல் வளருகின்ற பல செல்வ நலன்களையும் ஒருவனுக்குக் கொடுப்பதாகும் என்கிறார், குரல் தனை ஈந்த வள்ளுவனார்.

ஆயிரம் வாசல் இதயம்; யாரெல்லாமோ வருகின்றார்கள், போகின்றார்கள். எல்லோரும் எவராலும் கவரப்படமாட்டார்கள். மிக மிகச் சிலரே நட்பைப் புனிதப்படுத்துகின்றனர். ஒருவரொருவரை புரிந்து, ஜீரணித்து, உறவை வளர்த்துக் கொள்கின்றார்கள். உறவில் இன்பங்காண உண்மை அன்பே தேவைப்படுகின்றது. காதலின் சொற்கள் அனைத்தும் பத்திரப்படுத்தப்படுவது காதுகளில் அல்ல நெஞ்சிலேதான்.

நாடு விட்டு நாடு தேடிவருவது, கதைகள் பல பேசுவது, கவிதை எழுதுவது; ஆனந்தமயமான அத்தியாயங்களை வாழ்க்கையில் ஆரம்பித்து வைப்பது உல்லாசமான தென்றலின் ரதத்திலே உட்கார வைத்து சொர்க்கவானத்தின் சுகவீதிகளில் தூக்கி செல்வது எல்லாம் இந்த பிணைப்புக்களால் வந்த பந்தங்கள் தான். இல்லாவிடில் இதயத்தரசி மும்தாஜ் மறைந்தபின் அவளின் ஞாபகார்த்தமாகத் தன் இதயத்தில் ஏற்பட்ட புண்ணுக்கு மருந்தாக ஷாஜகான் சலவைக்கல்லால் காதல் சின்னமாம் தாஜ்மகாலைக் கட்டுவிப்பானா? உறவுக்காக கல்லால் எழுந்த கவிதையமுது; கலைச் சிறப்பின் சிகரம்! உலகப்புகழ் பெற்ற இக்கட்டிடம் சிறந்த காதல் சின்னமெனப் போற்றப்படுவதுடன் எம்மையும் வியப்பினுள் ஆழ்த்துகின்றது.

வெள்ளி நிலாவது வானிலே வந்து போகும்; அது வந்து போன சுவடு அந்த வானில் இல்லை. கொடியில் ஊஞ்சல் போட்டுத் தென்றல் போகும்;—>

அது ஊஞ்சல் போட்ட சுவடு அந்தக் கொடியில் இல்லை. உள்ளத்திலும் காதல் நிலா வந்து மின்னும்; அந்த ஊர் சுவடு மட்டும் மறைவதில்லை. இளமைப் பருவத்துக் காதல் சுவையானதும் தெய்வீகமானதும் கூட. அந்தப் புனிதமான காதல்கள் எத்தனையோ காவியமாக, கதைகளாக மாறியுள்ளன. காவியத் தலைவிகளையும், காப்பியத் தலைவர்களையும் நாம் அறிந்திருக்கிறோம்.

நாம் சந்திக்கும் அனைவரும் நம்மோடு இரண்டறக் கலப்பதில்லை. ஆயிரத்தில் ஒருவர்தான் உண்மையன்புள்ளவராக இருக்கின்றார். அப்படிப்பட்ட நண்பர்கள் கிடைப்பதே சுவீப் விழுந்த அதிஷ்டம் போன்றிருக்கும். உண்மை நண்பர்கள், ஒருவரில் உள்ள குறைகளை எடுத்துக் கொள்ள மாட்டார். வறுமை, அழகற்ற முகம், அழுக்கடைந்த ஆடை எதுவுமே நண்பர்களுக்கு வெறுப்பையுண்டாக்காது. கஞ்சிக்குத் தானும் வழியற்ற, மாற்றி உடுப்பதற்கும் ஆடையற்ற குசேலர் முடிச்சுக்குள் ஆசையுடன் கொண்டு போய்க் கொடுத்த அவலை அருவருப்பின்றி மிக்க விருப்புடன் உண்கிறார் கண்ணபிரான்.

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு"
(குறள்)

அதாவது நல்ல பண்புடையவர்களின் தொடர்பானது, படிக்கப் படிக்க நூலின் நயம் மேலும் இனிமை தருவது போல், பழகப்பழக மென்மேலும் இன்பம் தருகிறது. சங்கத்துச் சான்றோனை பாரி மன்னன் இறந்த பின் உயிர்வாழ விரும்பாத கபிலர் வடக்கிருந்ததையும்; கோப்பெருஞ்சோழன் உயிர் துறந்த துயரத்தைப் பொறுக்க முடியாத பிரசிந்தையார் தம்முயிர் நீத்துமாகிய நிகழ்ச்சிகள் பலவற்றை வரலாற்று இலக்கியங்களால் அறிந்து வியக்கின்றோம். இரண்டு உள்ளங்கள் ஒன்றித்திருக்கையில் ஒன்று தாக்கப் படும்போது மற்றயதும் மனம் வெதும்பி துடிக்குமாயின் அந்த உறவே புனிதமானது. அதுவே ஆழமிக்க தூய்மையான உறவு. நட்

# உன்னை நீயாக ஏற்றுக்கொள்

கமலா ஓர் இளம் பெண். அவள் தான் நிறத்தில் கறுப்பு நிறமுடையவள், தான் அழகு அற்றவள் என்ற கீழான எண்ணங்களுடன் வளர்ந்து வந்தாள். இந்த எண்ணங்கள் அவளின் மனதிலே மிகவும் ஆழமாகப் பதிந்திருந்தன. அவளைக் கேலிசெய்யும் நோக்குடன் ''கமலா, நீ கறுப்பு நிறமுடையவள்'' என்று யாராவது அடித்துக்கூறும் போதெல்லாம், அவள் மிகவும் மனம் உடைந்த நிலைக்கு உள்ளாவாள். தான் கறுப்பு நிறமுடையவளாக இருப்பதை விரும்பாத அவள், தான் தன்னையே ஏற்றுக் கொள்ள முடியாதவளாக இருந்தாள். ஒவ்வொரு முறையும் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்க்கும்போது, தன்னைப் பார்ப்போருக்கெல்லாம் தான் அழகற்றவள் என்ற நினைவினால் தன்னையே தான் வருந்திக்கொள்ளுவாள். இதன் விளைவாக தன் முகத்தைக் கண்ணாடியில் பார்ப்பதையே நிறுத்திக் கொண்டாள். அவள் தன்னை உள்ளபடியே ஏற்றுக் கொள்ள முடியாதவளாக இருந்தாள்.

இன்று எமது குடும்பங்களிலோ அல்லது சமுதாயத்திலோ தலைதூக்கித் தாண்டவம் ஆடும் ஒரு பெரிய பிரச்சினை ஒவ்வொருவனும் தன்னையே உள்ளபடி ஏற்றுக்கொள்ள முடியாதவனாகத் தத்தளித்தலேயாகும். மற்றவனுடன் நட்புறவு கொள்ளு முன், மற்றவனை அவனது குண, நடை, பாவனைகளுடன் ஏற்றுக்கொள்ளு முன் ஒருவன் முதன் முதல் தன்னையே ஏற்றுக்கொள்ளக் கூடியவனாக இருக்க வேண்டும். இன்றைய சமுதாயத்திலே கட்டையர்கள் நெட்டையாக வருவதற்குத் துடிக்கிறார்கள். அவர்கள் தங்கள் உயரம் பற்றி திருப்தி அற்றவர்களாக இருக்கிறார்கள். அனேகமான கட்டையர்கள் மிகவும் பெயர் வாய்ந்தவர்களாக இருக்கிறார்களே. கறிபல்டி (Garibaldi) என்ற பெரும் ஆட்

சியாளர்கள், போல் சாத்ரே (Paul Satre) என்ற புகழ் வாய்ந்த தத்துவ ஞானி, இவர்கள் உயரத்தில் மிகவும் குறுகியவர்கள்தானே! மறுபக்கம் பார்த்தால், உயரத்தில் நெட்டையர்கள் தாங்கள் கட்டையர்களாக இருக்க விரும்புகிறார்கள். ஏனென்றால், தாங்கள் போகும் இடமெல்லாம் தங்கள் படுக்கையைக் காவித்திரிய வேண்டியிருக்கின்றதே, தாம் செல்லும் வீட்டு நுழைவாயில்கள் எல்லாம் சிறியனவாக இருக்கின்றனவே, இவ்வாறான பிரச்சினைகளினால் நெட்டை மனிதன் தனது உயரம் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றான். உருவதில் பருத்தவர்கள் தங்கள் உடலின் பருப்பத்தைக் குறைப்பதற்காக எந்தவித தப முயற்சிகளையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். உருவத்தில் மெலிந்தவர்கள் தங்கள் பருவத்தைக் கூட்டுவதற்காக விற்றமின் குழுசைகளையும், சத்துநிறைந்த உணவு வகைகளையும் தேடித் திரிகிறார்கள்.

எல்லாம் தவறான முறையிலே, ஒழுங்கற்ற முறையிலே இருக்கின்றன போன்று தோன்றும் உலகிலேதான் நாம் இன்று எமது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறோம். நாம் எம்மை உள்ளபடியே ஏற்று அதன் வழியாக எம்மைத் திருப்திப் படுத்தி, முன்னேற்றப்பாதையிலே வீறு நடை போடுவதற்குப் பதிலாக நாம் நாமாக இல்லாது வேறு ஒருவராக எம்மை நாமே ஆக்கிக்கொள்ள முயற்சிக்கிறோம். எமது மனித ஆளுமை எமது உருவத்திலோ அல்லது பருபத்திலோ அல்லது நிறத்திலோ தங்கியிருப்பது ஒன்று அல்ல. மாறாக, அது மற்றவர்களோடு நாம் கொண்டுள்ள தூய தொடர்பிலேயே தங்கியுள்ளது. தன்னிலே நம்பிக்கை கொள்வதும், தன்னை உள்ளபடியே ஏற்றுக் கொள்வதும் மற்றவனை ஏற்றுக்கொள்வதற்கான ஒரு பலம் நிறைந்த உணர்வை உண்டு பண்ணுகிறது.

''மற்றவர்களுக்கிடையே ஒரு பலமான உறவை உண்டு பண்ணமுன், உள வழி நடாத்துனர் ஒருவர் முதன் முதலாக தன்னையே உள்ளபடி ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் முதலாக தனது சொந்த உணர்ச்சிகள், நினைவுகள், எண்ணங்கள் மட்டில் மிகவும் விழிப்புள்ளவராகவும், அவற்றை அப்படியே ஏற்றுக்கொள்பவராகவும் இருக்க வேண்டும் அப்படியானால் தான் அவர் உண்மையிலே மற்றவர்களுக்கிடையே ஒரு பலம் நிறைந்த உறவை உண்டுபண்ணக் கூடிய வழிகாட்டியாக இருக்க முடியும்'' என்று அறிஞர் கால் ரோயர்ஸ் (Carl Rogers) கூறுகின்றார். என்னை நான் உள்ளபடியே ஏற்றுக்கொள்ளும் போதுதான், நான் மற்றவனுடன் உறவு கொள்ளும்போது அவனையும் அவனின் குறை, நிறைவுகளுடன் ஏற்றுக் கொள்வேன். ஒவ்வொருவனும் தன்னை ஏற்றுக்கொள்ளுவதிலும், தன்னிடம் உள்ளவற்றைப் பகிர்வதிலும்தான் அன்பு நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கலாம். இந்த அன்பின் பிணைப்பில் நாம் எல்லோரும் எமது ஆளுமையை வளர்த்துக் கொள்ளுகிறோம்.

இன்றைய இளம் சமுதாயமே, நீ உன்னையே கேட்டுப் பார். ''நான் என்னை எனது குறை, நிறைவுகளுடன் ஏற்றுக் கொள்ளுகிறேனா? நான் எனது குறை, நிறைவுகளுடன் திருப்தியாக, சந்தோஷமாக இருக்கிறேனா? நான் திறந்த உள்ளம் உள்ளவனாக இருக்கிறேனா?'' இவைகளுக்கெல்லாம் நீ ''ஆம்'' என்று பதில் கூறக்கூடியவனாக இருக்கின்றாயானால், நீ நிச்சயமாக மற்றவனுடன் உறவு கொள்ளுவதற்கு எதுவித தடையும் இல்லை. நீ மற்றவனுடன் அவனின் குறை, நிறைவுகளுடன் திருப்தியான உறவை வளர்த்துக் கொள்ள முடியும்.

— சகோ. செபஸ்ரியன்

# வாசகர் அறிமுகம்



பெயர்: த. போஜராஜா — ஊர்: கொழும்பு — வயது: 25

உயர்தரக் கல்வியின் இலட்சிய எல்லையை அடைய முடியாது பள்ளி வாழ்வை நிறுத்திக்கொண்டு சாதாரண தர வகுப்பின் கணிதப் பாடத்தில் பிரத்தியேக வகுப்புக்களை நடத்திக் கொண்டிருப்பதுடன் எனது படிப்பை பிரத்தியேகமாக படித்துக்கொண்டிருக்கும் என்னை ''நான்'' என்னும் புத்தகத்தின் வாசகனுன அறிமுகப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இலங்கையிலும் இந்தியாவிலும் வெளியிடப்படும் தமிழ் இலக்கியப் படைப்புக்கள் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட, அறிமுகப்படுத்திக்கொள்ளும், அறிமுகப் படுத்திக் கொள்ளப்போகின்ற குப்பையைக் கிளறி, அவ்வப்போது அவற்றில் குண்டுமணியாக காட்சி தரும் இலக்கியப் படைப்புக்கள் என் அறிவின் மீது ஒளியை வீசும் அந்தக் கணத்திலேயே அவற்றை பொறுக்கி யெடுத்து வாசிப்பதில் ஆர்வமுடையவனுக எனக்கு ''நான்'' என்னும் எழுத்துப் படைப்பு ஒளி வீசுகின்ற என் அறிவை பிரகாசமடையச் செய்வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப் புத்தகம் பார்வைக்குப் பெறுமதியற்றதாயிருப்பினும் முற்போக்கான பிற்போக்கு வாதிகளுக்கு அதாவது முற்போங்கானவர்களாகக் காட்டிக்கொள்ளும் பிற்போக்குவாதிகளுக்கு முற்போக்கை உண்மையில் வெளிப்படுத்தும் ஒரு சிறந்த படைப்பாகும். ''ஆடையைக் கொண்டு நடத்தையை அளவிடாதே'' என்பதுபோல் அட்டையைக்கொண்டு புத்தகத்தை எடைபோடாதே.

## கேள்வி? பதில்!

கே: ஒரு பெண் என்னை உயிருக்குயிராகக் காதலித்தாள். ஆனால் நானோ என் இச்சைகளைத் தீர்க்கும் நோக்குடன் அவளை அன்பு செய்பவன் போல் எட்டு மாதங்களாக நடித்தேன். ஈற்றில் அவளது அன்புத் தொல்லையின் தாக்கத்தினால் அவள்மீது எனக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டது. அவளைத் திருமணம் செய்வதாக வாக்குறுதி கொடுத்தேன்; அதேவேளை, பிற ஆண்களோடு அளவளாவிக் கதைத்தல், ஆடுதல், நவீன பாணியில் அரைகுறை ஆடைகளை அணிதல் போன்றனவற்றைத் தவிர்க்கும்படி சில கட்டுப்பாடுகளையும் விதித்தேன். அவளோ, ''போதும் உங்கள் வேதாந்தம்; உங்களுடைய கொள்கைகளை உங்களுடனேயே வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறி என்னிடமிருந்து பிரிந்து விட்டாள். நானோ இப்பொழுது அவளை மறக்க முடியாமல் தவிக்கிறேன். குழம்பிய என் வாழ்க்கையை தெளிய வைப்பாயா ''நான்'' ஏ? — அபாக்கியசாலி, யாழ்ப்பாணம்

ப: ஆரம்பத்தில், உங்களிடமேயிருந்து உறவை 'ஒருதலைக்காதல்' என்றே வர்ணிக்கலாம். பின்பு அவளை அடைய வேண்டுமென்ற உள்ளத்துள் எழுந்த ஆசையால் திருமணத்திற்கு ஒப்புதல் அளித்தீர்கள். அதனால் அவளை முற்றாக உங்களுக்கே சொந்தமாக்க வேண்டுமென்று, கட்டுப்பாடுகளை விதித்து அவளை உங்கள் உடமையாக்க நினைத்தீர்கள். இத்தகைய மனப்பாங்கு எழுந்தது இயற்கையே. ஆனால் ஒவ்வொரு மனிதனும் தனித்துவமிக்கவன் என்பதை மறந்து விடக்கூடாது. நீங்கள் இருவரும் சுமூகமான உரையாடல் மூலம் உங்களுடைய அபிலாசைகளை தெரிவித்து ஒருவரையொருவர் புரிந்து வாழ முற்பட்டிருந்தால் இத்தகைய நிலை உங்களுக்கு ஏற்பட்டிருக்காது. மீண்டும் ஒருமுறை அவளை அணுகி உங்கள் மனநிலையை தெரிவித்து உள்ளம் திறந்து உங்கள் கருத்துக்களை பகிர முயலுங்கள். இல்லையெனில் நடந்தவற்றை மறந்து இனிமேல் இத்தகைய தவறு நிகழாதவாறு, மனதை பக்குவப்படுத்தி பிறரைப் புரிந்து வாழ முயலுங்கள். ஏனெனில் நீங்கள் நினைப்பது போல் பிறர் தம்மை மாற்ற வேண்டும் என்று எதிர்ப்பார்த்தல் ஆபத்தானது.

# • கழுதைகள் •

— எஸ். டேவிட் —

## தரிசனச் சித்திரம் — 3

பொல்காவலை புகையிரத நிலையம்—
புகையிரத மேடை நிரம்பிய பயணிகளின் நெரிசல்!
இந்த நாட்டை விட்டு நிரந்தரமாகவே பெயர்ந்து
தாயகம் செல்லும் மலையகத்தமிழ் மக்கள் கும்பல்
கும்பலாக
மூட்டை முடிச்சுகளுடன் பிறந்த மண்ணை, உற்ருர்
உறவினரை விட்டுப்பிரிந்து போகப்போகும்
பிரிவுத்துயரால் தொண்டைகள் அடைக்க
விம்மி . . . விசும்பி நெடுமூச்செறியும் பரிதாபக்
கோலங்கள்—
தலைமன்ஞர் இரவு தபால் வண்டி வந்து நிற்கும்
மேடைப் பக்கமாக இருந்த ஒரு பெஞ்சின்
அருகே அந்தச் சிறுவன் பெரியதொரு சாக்கு மூட்டைக்கு
காவலாளி போல உசாராக நின்ருன்! ஒரு பெரிய
மனிதர் அருகில் வீச்சு நடை பயின்றவண்ணம் உதடுகளுக்
கிடையே கனிந்து கொண்டிருக்கும் சுருட்டை
லாவகமாக சுவைத்து புகைத்த நிலையில்—
"டேய் சாக்கை கவனமாக பாத்துக்கடா! . . .
காக்கா மாதிரி 'ஆ' வென்று வாயைப் பிளந்திண்டு
நிக்காத"— அல்ஷேசன் நாயின் குரைப்புக்கு அடங்கி
ஒதுங்கிப் பதுங்கும் குட்டை பிடித்த தெரு நாய்க்
குட்டியின் பாவனையில் "சரிங்க ஐயா!" — அவன்
அடக்கமாகச் சொன்ஞன்; தான் ஒரு பெரிய புள்ளி
என்பதை அந்தச் சிறுவன் ஊடாக அதிகாரத்
தொனியாலும் அலட்சியப் பார்வையாலும்
அருகில் இருப்போரை 'சிந்திக்க' வைப்பது
அந்த வழுக்கைத்தலை மனிதரின் எண்ணம் போலும்!
அந்த மனிதரின் அலட்சிய அசைவுகளை அருகிருந்த

அப்பாவிக் கண்கள் சில 'அதிசயமாக'
பார்வை பாய்ச்சி . . . கூர்மை தீட்டி . . . ஏதேதோ
முணு முணுத்தன!
நிமிடங்கள் சில கரைகின்றன . . . . .
வேகத்தைத் தணித்துக் கொண்டு வெக்கையாகச்
சீறிக்கொண்டு வந்து நின்றது
தலைமன்னார் புகையிரதம்!
இடிபட்டுக் கொண்டு பரிதவித்தவாறு
உள்ளே நுழைய அவதிப்படும் பயணிகள்—
மூன்றும் வகுப்புக்கு நல்ல கிராக்கி!
முந்தினோர் சமர்த்தர்கள்! பிந்தியோர்—
தூங்கு மூஞ்சிகள் — நெடுந்தொலை வரை
தூங்கி வழியப் போகிறவர்கள்!
அந்தப் பெரிய மனிதர் அடக்கமாக நீண்டு
நிமிர்ந்து கிடக்கக் கூடிய 'சீற்' ஒன்றை
கைப்பற்றிக் கொண்ட பெருமிதத்தில் எதிரில்
நீண்டு கிடந்த ஒருவரை பார்த்து
ஒரு புன்னகை சிந்தினார்.
அந்தச் சிறுவன் சாக்குக்கு முன்னால்
அப்பாவித் தனமாக நின்றான்.
பறட்டைத் தலை கறுத்து மெலிந்த
குச்சில் உடல்வாகு 'பசி' முத்திரை
குத்தப்பட்ட சூம்பிய முகம்
பன்னிரண்டு வயதுதான் இருக்கும்.
",டேய் நான் கொஞ்ச நேரம் நித்திரை
கொள்ளப் போறன் ,சாக்கை கவனமாக
பாத்துக்கணும் , . . சொல்லுறது விளங்கு
தாடா?" — அதிகார அதட்டல்.
ஆமாங்க ஐயா" — அவன் தலையாட்டிச்
சொன்னான்!
"சாக்கு மேலே குந்திப் போடாதடா
சாமான்கள் நஞ்சி உடைந்து
போயிடும்"
"சரிங்க"
புகையுரதம் கூவிக்கொண்டு
நகர்கின்றது — தண்டவாளம் தடதடக்

கும் சீரான தாளலயம்!
உள்ளே ஏகப்பட்ட நெரிசல்
'சீற்' கிடைக்காமல் 'கொரிடோரில்'
இருப்பிடம் தேடிக்கொள்ளும்
கிழட்டு முகங்கள்; அவை மலையேறி
கொழுந்து பறித்து பறித்து உழைப்பால்
உடல் கரைந்த பாட்டாளி தாய்க்
குலப் பிரதிநிதிகள்!
"நமக்கு என்னத்திற்கு சீற்று? . . . . .
கொழந்த பிள்ளைக்காரிகள் கஷ்டப்
படாம இருந்தா போதும். . . ஆ. . . ம்ம்ம்
மாரியாத்தா நீதான் துணை" ஒரு
பெண்கிழம் அலுத்துக் கொண்டு
முந்தியது!
நீட்டி நிமிர்ந்து முதலைகள் மாதிரிக்
கிடக்கிறுங்க. . . கேட்டா இடம் தரவா
போறுங்க? . . மனச்சாட்சி இல்லாத
மனுசங்கதானே . . ." இன்னொரு கிழம்
வேதனையாக புறுபுறுத்தது.
இன்பத்தைக் கானலாகக் கண்டு கண்டு
கரைந்து போன ஆத்மாக்களின்
இறுதித்தாகங்கள் . . . இந்த நாட்டில்
. . . இந்த இறுதிப் பயணத்திலும் கானல் . . .
கானல் . . . கானல் . . . கானல் . . .
"சரியான புழுக்கமாய் இருக்குதப்பா"
அந்த பெரிய மனிதர் எதிரில் கிடந்தவரை
பார்த்து கதைக்கு அடியெடுத்தார்
"ஓம் . . . ஓம் . . . புழுக்கமும் பாண்டல்
நாத்தமுமாயிருக்கிறது . . . உந்த தோட்டக்
காட்டுச் சனங்கள் ஏறினதுக்குப் பிறகு
தான் உப்பிடி மணக்குதப்பா" —
எதிரில் நீண்டு கிடந்தவர் நாசூக்காக
சொன்னார். அருவருத்து முகம் சுழித்தார்.
"துப்புரவாக வாழத்தெரியாத கழுதைச்
சாதிகளப்பா!" — இந்த நாட்டில் கொழுந்
துக் கூடைகளை முதுகிலே சுமந்து கழு

தைகளாக கூனி வளைந்து மெலிந்த சிவன்களை
'பெரியவர்' முத்திரை குத்தி அப்படிக்
கூறினார் போலும்!
வண்டி வேகமாக விரைகின்றது : . .
அந்த சிறுவன் சிற்றில் பிடித்தவாறு
சோர்ந்து நின்றான்.
''நீங்க எங்க இருந்து வாறியள்''
—'பெரிய மனிதரை'
எதிரில் கிடந்தவர் விசாரித்தார்!
''நான் பதுளைக்கு போயிட்டு வாறன்
என்ர மருமகன் பொடியன் புடவைக்
கடை வச்சிருக்கிறான் — செட்டிக்குளத்
திலதான் நான் இருக்கிறேன்'' — கேள்விக்கு
மேலான பதில்!
''இதாரு இந்த பொடியன்?''
''உவன் . . . பதுளைக் கடைத்தெரு
வில புறக்கித் திண்டுக்கிண்டு திரிஞ்சான்.
இனக்கலவரத்தில தாய் தேப்பனை தவற
விட்டுட்டானாம் . . . பாவந்தானே . . . அது
தான் கூட்டிக்கிண்டு போறன் எடுபிடி
வேலையாவது செய்ய மாட்டானா?
ஜீவகாருண்ய 'சாயலில்' பெரிய மனிதர்
உதிர்த்தார்.
''டேய் நித்திரை கொள்ளுறியோ''
— அதட்டலால்
மிரண்ட அவன் ''இல்லீங்க ஐயா''
ஈனக்குரலில் பல்லிளித்தான்.
அவன் இனி 'தன்னிலை' இழந்த, சுயவிருப்பு
அறுந்த — 'உரிமை' பிடுங்கப்பட்ட . . .
உருவாக்கப்பட வேண்டிய 'குட்டி அடிமை'
அதற்கான முதல் பாடமாக 'நித்திரை' என்ற
உடல் தாகத்தை 'அதிகார குறடு' போட்டுப்
பிடுங்கப் படுவதை . . . அவன் உடன்
உணர்ந்து கொள்ள நியாயமில்லை.
''உவன்களை நம்ப முடியாதப்பா . . . . .
கொஞ்சம் கொழுப்பு வச்ச பிறகு வினையம்

செய்ய வெளிக்கிடுவான்கள் . . . சும்மாவா
சொன்னவன்கள் வயித்து வலியை
நம்பினாலும் வடக்கத்தியானை
நம்பக் கூடாதெண்டு . . .?''
''என்னட்ட இந்த பரிப்புக்கள்
அவியாது — ஒழுங்காத்தான் கூலியாக்களை
நடத்துவன். குழப்படி செய்தால் சூதி தறிக்க
கூட பின்னிற்க மாட்டன் ஓ!''
உரையாடலின் உட்கருக்களின் உண்
மைகள் சிறுவனுக்கு புரிந்திருக்க வேண்டும்.
இப்படியான பேச்சுக்கள் இப்போதுதான்
அவன் முதன் முதலாகக் கேட்கிறான்! . . .
புரிந்தென்ன? கேட்டென்ன?
அவன் 'சிறகு வெட்டப்பட்ட' கிளிக்குஞ்சு.
'கொரிடோரில்' தூங்கி வழியும் அப்பாவி
ஜீவன்களை உழக்கிக் கொண்டு ஒரு
கூடை வியாபாரி கொக்கரித்துக்
கொண்டு போனான் . . . உழக்குப்பட்ட
சோர்ந்த மனங்கள் அனுங்கி முனங்
குகின்றன — இந்த
அனுக்கங்களும் முனக்கங்களும்
மௌன அவலங்களாக அன்றி
நியாயக் குரல்களாக நிமிர்வுகண்டு
பலமாகி விட்டால் . . .
'இன இரத்தம்' கொதித்து 'இனவாந்தி'
கள் வெளியேறும்! இந்நாட்டில்
'மனிதாபிமானங்கள்' மரணித்து விட்ட
மனிதர்களால் ஏற்றப்படும் உணர்வு
ஊசிகளால் பாமரப் பாட்டாளிகள் உசார்
அடைந்து இனவாதம் பேசி ஒருமைப்
பாட்டை தூர உதைக்க ஒத்திகை பார்க்க
கும் சிறந்த 'வாகனமேடை' புகையிரத
தந்தான் — அது ஓடுகின்றது!
நின்ற நிலையில் கண் விழித்து நிற்பது
அந்த பிஞ்சு சிறுவனால் இயலாததாகி
அவன் அடிக்கடி தூங்கி விழுந்தான்.

உரையாடல் அலுத்த நிலையில் தனது
எஜமானனும் எதிரே கிடந்தவரும்
தூக்கத்தில் ஆழ்ந்தனர்—
எஜமான் அடிக்கடி கண்காணித்த
படியே கள்ளமாக குட்டித் தூக்கம்
போட்டு . . . விழித்து — போட்டு . . .
''டேய் மூதேவி'' கடைவயிற்றில்
எஜமானின் வலக்காலால் விழுந்த
பலமான உதையால் ''ஐயா!'' அவன்
தடுமாறினன்.
''சனியன் புடிப்பானே உன்ன ட
என்னடா சொன்னன். என்னடா
செய்யிருய்?'! — நாய் 'சள்' பாய்ச்சல்!
''. . . . . . . .'' அவன் — அவலமாக தூக்கம்
கலந்த பஞ்சக்கண்களில் துருதுருத்த
பார்வை . . . ''இனித் தூங்க மாட்டேனுங்க.''

*

பல நிலையங்களில் நின்று அலுத்து
நகர்ந்து விரையும் புகையிரதம்
மதவாச்சி சந்தியை தாண்டிய
போது 'பெரிய மனிதர்' விழித்துக்
கொண்டு சரிந்து கிடந்தார்.
இடையிடையே சிறுவனின்
வயிற்றில் கழுதை உதை கொடுத்து
உசார்படுத்திய அவர் சிறுவனைப்
பார்த்து ''கொஞ்ச நேரம்
நித்திரை கொள்ளப் போறியாடா?
''இல்லீங்க தூக்கம் கலைஞ்சிட்டுங்க
அவன் சிணுங்கினன்.
''சரி கொஞ்ச நேரம் இதில
இருந்து கால்கடுப்பை ஆத்து பாப்பம்''
அவன் ஓரமாக உட்கார்ந்தான்.
எதிரில் கிடந்தவன் முனங்கிக்
கொண்டு ''எந்த இடம்?''—
''மதவாச்சியைத் தாண்டீற்றுது''

பெரிய மனிதர் கொட்டாவி விட்டார்.
''அப்ப உங்கட இறங்கிற இடம்
வரப்போகுது என்ன?''
''ஓமோம்... இறங்கி மூன்று மைல்
நடக்க வேணுமப்பா!''
''இந்த சாக்கு?''
''அது பெரிய பாரமே?..... உவன்
சுமக்கிறதுக்கு இருக்கிறுன்தானே''
சுமை சுமப்பதற்காக கொஞ்ச நேரம்
கால்கடுப்பை குறைக்கும் அந்த
அப்பாவிச் சிறுவனுக்குத்தான் தெரியும்
அந்த சாக்கின் பாரம்!
அவன்தான் சுமக்கப் போகின்றுன்.
புகைவண்டி செட்டிகுளத்தில் நின்றது.
''அப்ப நான் இறங்கப்போறன்''
''சரி... சரி... நானும் முருங்கனில
இற கிருவன்''
இறங்குவோர் இறங்குகின்றனர்—
சாக்கு மூட்டை இறக்கப்பட்டது.
''தூக்கடா !''
''தூக்கி விடுங்க ஐயா''
''உணர்ச்சி கெட்டவனே இதை
தூக்க ஏலாம.....'' சீறிக்கொண்டு
அவர் தூக்கி விட்டார்.
அவன் நலிந்து நலிந்து நடந்தான்
புகைவண்டி நகர்கிறது

*

குளிர்கால விடியல் இரவு பனிகாற்று
சிலுசிலுத்து உசாய்ந்து ஊதியது.
மனச்சாட்சி வக்கரித்து போன முதலாளித்
துவச்சாயல் படர்ந்த பெரிய தனமான
பூச்சுடைய அந்த "பெரிய மனித கழுதை''
அப்பாவிச் சிறுவனை கழுதையாக நினைத்து
அந்தப பாரச்சாக்கை மூன்று மைல்கள்
சுமக்க வைக்கப் போகின்றது. அவன்

இனி அடிமையாக . . . கழுதையாக
அந்த பெரிய கழுதையால் வதைக்கப்படப்
போகிருன்!
இலங்கையில் கழுதைக்குப் பெயர் போன
மன்ஞரில் கூட இப்போது நிஜக்கழுதை
கள் சுதந்திரமாக வாழுகின்றன.
'தோட்டக்காட்டான்' என பச்சை
குத்தப்பட்ட இந்த சிறுவன் . . . ?
இப்படி கடத்தி வரப்படும் 'தோட்டக்
காட்டு கழுதைக் குட்டிகள்' எத்தனை . . . எத்தனை . . . ?

---

## மாதிரி சந்தாப் படிவம்

பெயர்: ..................................................

விலாசம்: ..................................................

..................................................

ஒருவருட "நான்" சந்தாவாக ரூபா 10/—ஐ காசுக் கட்டளை / தபால் கட்டளை / காசோலை மூலம் இத்தால் அனுப்புகின்றேன்,

திகதி.............................. ..............................

கையொப்பம்

குறிப்பு: பணம் பெறுபவர் பெயர்: ''நான்'' ஆசிரியர்.
பணம் பெறும் தபாற்கந்தோர்: அம்பிட்டி.

# வாசகர் பூங்கா

**பதிலளித்தன—** சிறப்பிதழில் வெளி வந்த மனம் ஒரு . . . , அலைகள், செபசிகிச்சை என்பன எனது கேள்விகளுக்குப் பதிலளித்தன. 'கேவலம்' எனக்கு சிரிப்புடன், சிந்தையைக் கிளறியது.

P. புஸ்பம்
—பெரிய விளான்

**புதுமெருகு—** தை-மாசி இதழ் இம்முறை புதுமெருகையும் கவர்ச்சியையும் கொடுத்தது. அலைபாயும் இளம் உள்ளங்களின் மயக்கத்தைப் போக்க மதம் இன்றியமையாதது என்ற கருத்து எனக்கு மன உறுதியைக் கொடுத்தது.

—சி. சாந்தலட்சுமி
இளவாலை

**சிப்பியுள் முத்து—** தை-மாசி சிறப்பிதழ் என்ற சிப்பியினுள் தரமான பல முத்துக்கள் கண்டு பெருமைப்பட்டேன். 'நானே' உன் வளர்ச்சியில் மலைத்து நிற்கிறேன். பெண்ணினத்தை தட்டி எழுப்பிய பெப்பிக்கு என் வாழ்த்துக்கள்.

—A. ஜசி
கல்கிசை

**உள மகிழ்ச்சி—** கடந்த தை-மாசி இதழை வாசித்தேன். 'அலைகள்' என்ற கட்டுரை என் உள்ளத்திலே அறிவு அலைகளாக பாய்ந்தது மட்டுமல்லாமல் உள மகிழ்ச்சியையும் பிறப்பித்தது. எம்மை போன்றவர்களுக்கு அறிவு விருந்தளிக்கும் 'நானே' உனது சேவையை வரவேற்கிறேன்.

—மனுவெல்
கண்டி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 6

4×4 ஆகுமாறு 16 சதுரங்கள் அமைத்து இடமிருந்து வல மாக இலக்கங்களை இட்டுக்கொள்க.

அடைக்க வேண்டியவை:— 7, 13.

இடமிருந்து வலம்:

1. உறவில் இது ஒருவகை
9. உறவு, பந்தம், பாசம் யாவற்றையும் விடுத்துச் செல்லல் (மூன்று எழுத்துக்கள்)
14. மிக நெருங்கிய உறவுள்ளோரை, உடலில் காணப்படும் இதனோடு தொடர்பு படுத்தி சொல்வார்கள்.

மேலிருந்து கீழ்:

1. இது அதிகமாக இருக்கும் ஒருவரிடமே உறவு முறை கொண்டாட முற்படுவார்கள்.
6. உறவொன்றும் இல்லாத மனிதன் இது இல்லாத பறவைக்குச் சமன்,

கீழிருந்து மேல்:

16. திண்மத்திற்கும் வாயுக்கும் இடையிலிருக்கும் தொடர்பை இது காட்டிநிற்கும்.

முடிவுத் திகதி:— 25, சித்திரை. 82.
பரிசு:— ஒரு வருட ''நான்'' கள்
குறிப்பு:— ஒருவர் எத்தனையும் அனுப்பலாம்.

*Printed by: Bravi Press, 274, D. S. Senanayake Vidiya, Kandy.*